4th February 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது எந்த வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. அதில் ஏதாவது மாற்றம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது ஆங்கிலம் 4-வது ஸ்டாண்டர்டிலிருந்து சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டிலிருந்து 3-வது ஸ்டாண்டர்டிலிருந்து சொல்லிக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கனம் கல்வி அமைச்சருடைய கருத்துக்கள் மிகவும் உயர்வானவை. அவைகள் எப்போது அமுலாக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடியாக, அவர்களுடைய கருத்துக்கள் பெரும்பாலும் பெற்றோர்களாலும், மாணவர்களாலும் மிகமிக ஆதரிக்கப்பட்டு வருகின்றன. ஆகையால் அவைகளை எப்பொழுது அரசாங்கம் அமுலாக்க உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கல்விப் பிரச்னையைக் குறித்து அரசாங்கம் கொண்டிருக்கும் கருத்துக்கள் முடிவாக ஆராயப்பட்டு மார்ச் மாதம் 30-ம் தேதி யன்று இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டு, மன்றத்தின் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளப்படும் என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அப்பொழுது கனம் அங்கத்தினர் தங்களுடையப் பாராட்டுதலையும் ஏதாவது யோசனைகளையும் சொல்லவேண்டுமென்றால், அதாவது மார்ச் மாதம் 30-ம் தேதியன்று அரசாங்கத்தின் முடிவை சமர்ப்பிக்கும்போது, சொல்லலாம். அப்பொழுது எல்லோருடைய யோசனைகளையும் கேட்ட பிறகு, அடிக்கடி மாற்றக்கூடிய நிலைமை இல்லாமல் ஒரு இறுதியான கல்வித் திட்டத்தை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன்.

### தேச பாதுகாப்புச் சட்டம் (கைது செய்யப்பட்டவர்கள்)

* 55. கேள்வி.—திரு. அ. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களில் இதுவரை விடுதலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(உ) விடுதலை செய்யப்பட்டதின் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 107 persons were detained under the Defence of India Rules.

(*b*) Of these, 61 have been since released.

(*c*) Their release was ordered, as it was considered, after a review of their cases that it was not necessary to keep them under detention any longer.

[4th February 1963

**திரு. எஸ். மாதவன் :** கேரளாவில் கம்யூனிஸ்ட் ஆட்சி இருந்தும்கூட அங்கு குறைவான பேர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கேரள மாநிலத்தில் இப்பொழுது கம்யூனிஸ்ட் ஆட்சி இல்லை. கனம் அங்கத்தினரின் கருத்திற்கும், சர்க்கார் நிலைமைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது விடுவிக்கப்பட்டிருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்களைவிட சிறையில் அதிகமான தலைவர்கள் இருக்கிறார்களே, இப்பொழுதுள்ள சூழ்நிலையை உத்தேசித்து அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்து அவர்களை விடுதலை செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பு கூறியதுபோல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்தவர்களின் விஷயத்தைப் பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அவர்களை சிறையில் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றினால், அவ்வப்போது அவர்களை விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைமறைவாக இருந்த திரு. பி. ராமமூர்த்தி என்னென்ன வேலை செய்தார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்திற்குத் தெரிந்திருந்தாலும்கூட சொல்ல முடியாது.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுபவர்களிடமிருந்து ஏதாவது கையெழுத்து வாங்கிக்கொண்டு அல்லது அவர்களுடைய நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து விடுதலை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எழுதிவாங்கவேண்டிய நிபந்தனை ஒன்றும் இல்லை. அதற்குமேல் அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்று கூற முடியாது.

**திரு. து. ப. அழகமுத்து :** அவர்கள் எந்த வகுப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டிடன்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறவர்கள் உயர்ந்த வகுப்பில் தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் படிச் செலவும் பிரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இப்பொழுது நமது அரசியல் தலைவர்கள் காலையில் இங்கே பேசினால் மாலையில் பீகிங் ரேடியோவில் ஒலி பரப்பப்படுகிறதே. இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகள் ஏதாவது தகவல் கொடுக்கிறார்களா ? விடுவிக்கப்பட்டவர்களின் மீது கண்காணிப்பு இருக்கிறதா ?

4th February 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : பீகிங்கின் திறன் தான் இதிலிருந்து புலப்படுகிறது. இங்கேயிருக்கிற கம்யூனிஸ்டுகளோ, மற்றவர்களோ நாட்டு நலனுக்கு விரோதமாகச் செய்கிறார்கள் என்று அதிலிருந்து எடுத்துக் கொள்ள முடியாது.

**திரு. கே. மூக்கையா தேவர்** : பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள சீனாக்காரர்கள் எவ்வளவு பேர்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி** : மவுண்ட்ரோடிலுள்ள சீனாக்காரர் ஹோட்டல் பழுது பார்க்கப்படுகிறது என்று சொல்லி ஜனவரி 26-ம் தேதியிலிருந்து 28-ம் தேதி வரையில் மூடப்பட்டிருந்ததே. அப்போது அந்த ஹோட்டல் அரசு கண்காணிப்பில் மராமத்து செய்யப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதுபற்றியெல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தக்க கவனம் செலுத்தப்படும். அந்த விவரங்களை எல்லாம் இங்கே கொடுப்பது சரியல்ல முறையாகாது.

*Employees' State Insurance Scheme*

* 57 *Q*.—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to reorganise the Employees' State Insurance Scheme in order to enable the employees to derive the benefits to which they are entitled fully and promptly; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The State Government are responsible for providing medical treatment under the Employees' State Insurance Scheme and the scale and standard of medical benefits to which the employees are entitled and as prescribed by the Employees' State Insurance Corporation are being fully ensured. The question of reorganising the Employees' State Insurance Scheme does not arise.

(*b*) Does not arise.

(அ) தொழிலாளர் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ், தொழிலாளருக்கு வைத்திய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு மாநில அரசாங்கத்தினுடையது. தொழிலாளருக்கு அளிக்கவேண்டிய மருத்துவ உதவிகளின் அளவும், தரமும், தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனால் நிர்ணயிக்கப்பட்டவாறு முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமா என்கிற பிரச்னைக்கு இடமேயில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.